[1984 மார்ச் 7

Open Jails.

*** 70. Q.—THIRU E. S. VENKATESAN: Will the Hon. the** Minister for Law and Industries be pleased to state:

(a) the number of Open Jails that are functioning at present in Tamil Nadu; and

(b) the number of prisoners kept in each Open Jail and the classification of prisoners in each of them?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஒன்று.

(இ) சிங்காநல்லூரிலுள்ள திறந்த வெளிச் சிறையில் 26 கைதிகள் உள்ளனர். திறந்த வெளிச் சிறையில் கைதிகள் வகைப் படுத்தப் படுவதில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, திறந்த வெளித் சிறை ஏற்படுத்துவதனுடைய நோக்கம் என்ன? அது எப்படி நிர்வகிக்கப்படுகிறது, எவ்வகைக் கைதிகள் அங்கு வைக்கப்படுகிறார்கள், அங்கிருந்து தப்பிப்பதற்கு இதுவரை யாரும் முயற்சி செய்யவில்லையா என்பன போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இது பெரிய கேள்வி. திறந்த வெளிச் சிறைச் சாலைகள் அமைப்பதன் முக்கிய நோக்கம், சிறைகளிலுள்ள இட நெருக்கத்தைத் தவிர்ப்பது. இரண்டாவது, கைதிகளின் மறுவாழ்விற்காக விவசாயத்தில் சரியான முறையில் பயிற்சி அளித்தல். மூன்றாவது விவசாய உற்பத்தியின் துறைகளை தன்னிறைவு ஆக்குதல். நான்காவது ஒழுக்கம் உள்ள கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் ஓரளவு சுதந்திரம் அளித்தல். ஐந்தாவது குறைந்த பாதுகாப்புக் கொள்கையை வலியுறுத்துதல். இந்த அடிப்படைகளிலே, இந்த நோக்கத்தோடு ஈடேற்றப் பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் மற்றும் ஒரு வினாவைத் தொடுத்தார். எத்தகைய வர்கள் அந்தத் திறந்த வெளிச் சிறைச் சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள் என்று காஷுவல் கைதிகள், நட்சத்திர வகுப்பு சிறைவாசிகள், இம்மாநிலத்தில் இருப்பிடத்தைக் கொண்டவர்களாக உள்ள சிறைவாசிகள், 21 வயதிலிருந்து 55 வயதுவரை உள்ள நல்ல உடல்நிலை மற்றும் மனநலம் உள்ள சிறைவாசிகள் மற்றும் உணர்ச்சி வசப்படாத, கட்டுப்படும் தன்மை கொண்ட நன்னடத்தை உள்ள சிறைவாசிகள், நல்ல குடும்பப் பாசம் கொண்ட சிறைவாசிகள், குறிப் பிட்ட இருப்பிடம் அல்லது குறிப்பிட்ட தொழில் கொண்ட சிறைவாசிகள், தண்டனைக் குறைப்பு சேர்க்காமல், ஓராண்டு தண்டனை கழித்து நீண்ட கால சிறைவாசிகள்; ஆனால் இச் சிறைவாசிகள் தண்டனைக் குறைப்பைச் சேர்க்

1984 மார்ச் 7]

காமல் இன்னும் 5 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவிக்கவேண்டியவர் களாக இருக்கக் கூடாது. மற்றும் தண்டனைக் குறைப்பைச் சேர்க்காமல் 3 ஆண்டுகள் தண்டனை கழித்த ஆயுள் சிறைவாசிகள், ஆனால் இச்சிறை வாசிகள் தண்டனைக் குறைப்பு சேர்க்காமல் இன்னும் 5 ஆணடுகளுக்கு மேல் தண்டனை அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கக் கூடாது. விதி முறை களை மீறாது நல்ல முறையில் காப்பு விடுப்பை முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். திறந்த வெளிச்சிறையில் வேலை செய்ய விருப்பம் உள்ள சிறைவாசிகள், இதற்கு முன்பு விவசாயம் செய்தவர் அல்லது வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழில் அனுபவம் உடையவராகவோ சிறை வாசிகள் இருந்தால் அவர்களும் கருதப்படுவார்கள்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, இந்தத் திறந்த வெளி சிறைக்கு அனுப்பப்படுபவர்களில் எவ்வளவு பேர் இதனால் பயன் அடைந்திருக் கிறார்கள் ? அதில் யாராவது சிறப்பாக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இதுகாறும் 26 கைதிகள். ஒட்டுமொத்தமாக இவ்வளவு பேர்கள் என்ற தகவல் தற்போது என்னிடமில்லை. மன்னிக்க வேண்டும் . . . சிங்காநல்லூரில் மட்டும் தற்போது 33 பேர்கள் இருக்கின்றார்கள். மற்ற சிறைச்சாலைகளில் எவ்வளவு பேர்கள் என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் 'பெனிபிட்' பற்றி கேட்கிறார்கள். சிறைச்சாலையில் இருக் கின்றவர்கள் என்னென்ன விதிகளின் அடிப்படையில் அங்கே அடைக்கப்பட்டி ருக்கின்றார்கள் என்று ஏற்கெனவே சொன்னேன். அந்தப் பலனை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலேயிருந்து சிங்காநல்லூரில் மட்டும் இது போன்ற திறந்தவெளி சிறைச்சாலை இருப்பதாகத் தெரிகிறது. சிறைச்சாலைகளில் இருப்பவர்களுக்கு தண்டனை அளிப்பது அவர்கள் திருந்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான். அந்த அடிப்படையில்தான் தண்டனைகள் வழங்கப்படு கின்றன. திறந்தவெளிச் சிறையிலே இருப்பதாலே அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அரசாங்கம் ஒவ்வொரு மத்திய சிறைக்கும் சேர்த்து ஒரு திறந்தவெளி சிறைச்சாலை அமைத்து, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட குவாலிபிகேஷன், தகுதிகள் உள்ள கைதிகளை அந்தச் சிறைச்சாலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமும் அதுவேதான். அந்த அடிப்படையிலேதான் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முத்துப்பட்டியிலும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கப்பட்டியிலும் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வேடப் பாக்கத்திலும், செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேங்கடமங்களம் என்ற இடத்திலும் 4 திறந்தவெளி சிறைச்சாலைகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. நிதிநிலைக்கு ஏற்ப மற்ற பகுதிகளில் இது விரிவாக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இந்தத் திறந்தவெளி சிறைச்சாலைகளில் குறைந்த கால தண்டனை 3 மாதம், 6 மாதம் என்று பெற்றவர்களை வைப்பது சிறப்பாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா ? திறந்தவெளி சிறைச்சாலை என்று சொல்லும்போது, சுற்றி மதில் சுவர் இல்லாமல் இருக்குமா ? அரசியல் வாதிகளைக் கைது செய்தால், அவர்களை அப்படிப்பட்ட சிறையில் வைத் திருப்பது சிறப்பாக இருக்குமா ? இதில் அரசின் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, குறைந்த கால தண்டனை பெறுகின்றவர்கள் அங்கே அனுப்பப்படுவதில்லை. வேலி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தப்பித்து ஓடாத அளவுக்கு மனம் பெற்றவர்களாக இருந்து திருந்தி வாழவேண்டுமென்ற உணர்வு மிக்கவர்களாக உள்ளவர்களைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம்.

திரு. ஜேப்பியார் : தலைவர் அவர்களே, அரசியல் கைதிகளையும், தொழி லாளர்கள் பிரச்சினையில் போராட்டங்களிலே ஈடுபட்டு கைது ஆனவர் களையும் தனியாக சிறையிலே வைத்து பாதுகாப்பளிக்க ஏற்பாடுகள் இருக் கின்றனவா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப, எத்தனை பேர்கள் கைதாகின்றார்களோ அதைக் கணக் கில் எடுத்துக்கொண்டு இருக்கின்ற இடத்திற்கு ஏற்ப அந்தப் பிரச்சினை களுக்கு அவ்வப்போது தீர்வு காணப்படுகிறது. அதற்காக ஒரு நிரந்தரத் திட்டம் என்பதில்லை.

திரு. சி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச் சாலையில் அதிகக் கூட்டமாக இருக்கிறது, சரியான வசதிகள் இல்லை என்றும் வேறு இடத்தில் சிறை அமைப்பதாகவும் ஏற்கெனவே அரசு அறிவித்திருந் தது. அந்தப் பகுதியிலே சிறை அமைக்கப்பட்டு வருகிறது. அப்படி அமைக்கப்படுமானால், அது எப்போது முடிவடைந்து இங்கேயிருக்கின்ற சிறைச்சாலை அங்கே மாற்றப்படும் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, புழல் ஏரி பகுதியில் புதிதாக நவீன வசதிகள் உடைய மைய சிறைச்சாலையை அரசு அமைத்து வருகிறது. கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணி முடிந்து அது முடியும் தருவாயில் உள்ளது. இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் பணி முடிவுற்றுவிடும். பிறகு சென்னையிலே இருக்கின்ற மைய சிறை அங்கு மாற்றப்பட்டு, அந்த இடம் ஜெனரல் ஆஸ்பிடல், எம்.எம்.சி.-க்கு அளிக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டிருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலையைப் பொறுத்த வரையிலும், செலவு அடிப்படையிலே அரசு 'கம்பேரடிவ் ஸ்டடி' (Comparative study) ஏதாவது நடத்தியிருக்கிறதா? திறந்தவெளி சிறையை நடத்துவது நல்லது என்று அரசு கருதுகிறதா? சிறையிலே இருக்கின்ற பெண் கைதிகளை கட்டாயம் இந்தத் திறந்த வெளி சிறையிலே கொண்டுவருவது நலம் பயக்காதா? அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, திறந்தவெளி சிறையிலே சிறைவாசிகள் இருக்கின்றபோது, அவர்கள் பணியிலே ஈடுபடுகின்ற காரணத்தால், உழவு போன்ற தொழிலிலே ஈடுபடுகின்ற காரணத்தால். வருவாய் இருக்கிறது. அந்தப் பலன் அந்தச் சிறைவாசிகளுக்கும் கிடைக்கிறது. பெண்களைப் பொறுத்தவரைக்கும் தனியாக அவர்களுக்கு ஒரு திறந்தவெளி சிறைச்சாலை அமைக்க வேண்டுமென அரசு கருதி வருகிறது. அந்தச் சிறையை மதுரையிலே அமைக்கலாம் என அரசு கருதி வருகிறது.

Post of 'Director of Prosecutions'

*71. Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru D. Santosham) : Will the Hon. the Minister for Law and Industries be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government, to create a 'Director of Prosecutions' post ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.